<u>19.11.2025</u>

<u>அசல் வழக்கு எண். 123 /2020</u>

<u>வா .சா. 1 –</u> திரு. வன்னியன்

<u>சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.</u>

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

1. கடந்த 25 வருடங்கலாக வழக்கு நடத்துவதில் நீங்கள் தேர்ச்சி பெற்றவர் என்றால் சரியல்ல. வழக்கில் கண்ட சொத்தும் இதை தவிற வேறு எசொத்துக்களும் உங்கள் தாத்தா பெரியசாமி தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட சொத்து உங்கள் தாத்தாவிற்கு 1945 ல் கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. உங்கள் தாத்தாவிற்கு உங்கள் தந்தை உட்பட 3 ஆண்மக்கள் வாரிசகள் என்றால் சரிதான். தாத்தாவின் மறைவிற்கு பிறகு குடும்ப சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்டதுஎ ன்றால் சரியல்ல. வழக்கில் கண்ட சொத்து தெற்கு கருங்குளம்கிராமம் பகுதி – 1 அயன் புஞ்சை சர்வே எஎண். 473 ல் உள்ளது என்றால சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்திரணம் 6 ஏக்கர் 47 சென்ட் என்றால் சரிதான். அதில் 1 பகுதியை விட்டுவிட்டு மீதி பகுதி பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் ஒவ்வொரு சகோதரருககும் 1 ஏக்கர் 92 அரை சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால சரியல்ல 2 ஏக்கர் ஒதுக்கப்ப்டடது.

3. தாவா சொத்தில் கிணறு உள்ளதா என்றால் உள்ளது. அந்த கிணற்றிக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாஎ ன்றால் 47 சென்ட் ஒதுக்கப்பட்டுள்ளது. உங்கள் தந்தைக்கு சண்முக தேவர் என்ற சகோதர் உண்டு என்றால் சரிதான். சண்முகதேவர் அவரது பாகத்தை உங்களது சகோதரர் முருகானதத்துக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு தன்னை ஏமாற்றி சொத்தை வாங்கிவிட்டதாக சண்முக தேவர் அசல் வழகுகு எண். 92/99 வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4. சண்முக தேவர் போட்ட வழக்கிற்கு எதிராக உங்கள் சகோதரர் 107/99 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 2 வழக்கும் சேர்த்து நடத்தப்பட்டு 8.6.2004 ல் தீர்ப்பு பகரப்பட்டது என்றும் அதில் சண்முக தேவருக்கு எதிராக வழக்கு

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2025.11.19 17:08:55 +0530

தள்ளுபடி செய்யப்பட்டும் உங்கள் சகோதரர் வழகது அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

5. உங்கள் தந்தையின் பெயர் வீரமணி தேவர் என்றால் சரிதான். உங்கள் அப்பா 20.9.1969 ல் சொத்தினை முருகானந்தம் கிரையம் வாங்குவதற்கு முன்பாக ஒத்திக்கு வாங்கியிருந்தார் என்றால் சரிதான். முருகாந்தம் கிரையம் வாங்கியது 11.12.1995 ல் என்றால் சரிதான். பிறகு முருகானந்ததிற்கும் உங்களுக்கும் சுமூகமான உறவு இல்லை என்றால் சரியல்ல.

6. முருகானந்தத்திடம் இருந்து ராமலட்சுமி என்பவர் 2007 லே கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ராமலட்சுமி கிரையம் வாங்கிய பிறகு உங்கள் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து 230/2008 வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். ராமலட்சுமியும் உங்கள் மீது 139/2008 வழக்கு தாக்கல் செய்துளார் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த வழக்கில்விளம்புகையும் முன்னுரிமைஹயிம் கேட்டு தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் சரிதான். 2 வழக்கும் ஒன்றாக நடத்தப்பட்டு 2 வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் 2 வழக்கிற்கும் 23.3.2017 ல் தீர்ப்பு பகரப்பட்டது என்றால் சரிதான்.

7. நீங்கள் தாக்கல் செய்த வழக்கில் கேட்ட அதே பரிகாரத்தை கேட்டுதான் இந்த வழக்கையும் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த 230/2008 ல் வழக்கிற்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல செய்துள்ளேன். அதன் மேல்முறையீட்டு எண் என்ன என்றால் 123/2020.

8. நீங்கள் 230/2008 ன் வழக்கின் மீது மேல்முறையீடு செய்யவில்லை என்றும் அந்த தீர்ப்பு இறுதியானது என்றால சரியல்ல. அசல் வழகது எண். 132/2008 மற்றும் 230/2008 வழக்குகளில் முருகாந்தம், ராமலட்சுமி வாங்கிய கிரையமும் உறுதி செய்யப்ட்டது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கிற்கு பிறகு ராமலட்சுமி மற்றொரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

9. அந்த மேல்முறையீட்டை ராமலட்சுமி உங்கள் குடும்பம் உறுப்பினர் அனைவரும் மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். முருகானந்ததிடம் இருந்து தான் பணம் பெற்றுக்கொண்டதாகவும் அதனால் வழக்கை வாபஸ் பெற்றார்

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2025.11.19 17:09:02 +0530

என்றால் சரியல்ல. இந்த வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. ராமலட்சுமி கிரையம் பெற்ற சொத்தின் ஒரு பகுதி தேசிய நெடுஞ்சாலைக்காக கைப்பற்றப்பட்டது என்றும் வழக்கு நடத்தப்பட்டு அவருக்கு நஷ்ட ஈடு தொகை வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

11. ஒத்தி திரும்ப பெறப்பட்டு செல்லடிக்கப்பட்டதால் உங்களுகககு உரிமை எதுவும் கோர முடியாது என்றால் சரியல்ல. உங்களுக்கு உரிமை இல்லை என்பதால்தான் நில ஆர்ஜீத நடவடிக்கையில் நஷ்ட ஈடு கோரி மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒத்தியின் அடிப்படையில் காலாவதியாவிட்டது என்று உரிமையாளர் ஆகிவிட்டதாக கோரிக்கை வைத்தீர்கள் என்றால் சரிதான். அந்த கோரிக்கை நீதிமன்றத்ல் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

12. முருகாந்தம் ஏற்படுத்திய கிரையத்தின் அடிப்படையில் பிரதிவாதி தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளார் எனறும் அவர் பெயரில பட்டா ஏற்பட்டும் தீர்வை ஏற்பட்டுவிட்டது என்றும் நீங்கள் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் கோரிய பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

13. ராமாலட்சுமின் பணப்பற்று ரசீது உங்களை கட்டுப்படுத்தும் என்றும் தாவா சொத்து முருகானதத்தின் தனிப்பட்ட வருமானததில் வாங்கப்பட்டது என்றும் அதனால் உங்களுக்கு எந்த உரிமையில் இல்லை என்றால் சரியலல. ஒத்தி அடிப்படையில் நீங்கள் உரிமையார் இல்லை என்றும் அதனால் நீங்கள் கோரும் பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால சரியல்ல.

14. உங்கள் தந்தை சொத்துக்கள் எதுவும் பாகம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நீங்களும் கேசவனும் மட்டும் வழகககு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல குடுமபத்தினர் அனைவரும் சேர்ந்து வழக்கு போட்டுள்ளோம். நீங்கள் பரிகாரம் உங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2025.11.19 17:09:08 +0530